வாரிசுகளாலேயே
கொல்லப்படும்
வயதான பெற்றோர்!


# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 FEBRUARY

மலர்: 8 இதழ்: 5 பிப்ரவரி 2015 விலை: ரூ. 5

## தாய்மதம் திரும்புதல் என்றால் என்ன?

- ஈயிடம் இழந்ததை மீட்க வழியுண்டா?
- நோயும் மருந்தும் ஈயில் உண்டு!



# மறுமைக்காக உழைக்க வேண்டாமா?

இப்பரந்த உலகில் நாம் நீர்க்குமிழி போல் தோன்றி மறைகிறோம். நமது இவ்வுலக வாழ்வில் அவரவர்க்கு விதிக்கப்பட்ட தவணை முடிவதற்குள் மறுமை உலகிற்க்கானதை சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தவர்களுக்கு இம்மையிலும் நிம்மதி. மறுமையிலோ அதைவிட பன்மடங்கு இன்பங்கள் வாய்ந்த சொர்க்கம் வாய்க்கும். ஆனால் இதை நம்பாதவர்களுக்கும் அலட்சியம் காட்டுபவர்களுக்கும் இவ்வுலக நடப்பில் அதிருப்தி, நிராசை, அமைதியின்மை! மறுமை உலகிலோ தீராத வேதனைகள் நிறைந்த நரக வாழ்வு!

மறுமைக்காக உழைக்க விரும்புவோருக்காக நபிகள் நாயகம்(ஸல்) நினைவூட்டும் சில உண்மைகள் இதோ:

- **இழப்புக்குள்ளாக்கப் படும் அருட் செல்வங்கள்:**

“மனிதர்களில் அதிfமானோர் இரண்டு அருட் செல்வங்களின் விஷயத்தில் (ஏமாற்றப்பட்டு) இழப்புக்குள்ளாகி விடுகின்றனர். 1. ஆரோக்கியம். 2. ஒய்வு” என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி) (ஆதாரம் : புகாரி)

- **உலகத்தையும் அதிலிருப்பவற்றையும் விடச் சிறந்தது:**

‘சொர்க்கத்தில் ஒரு சாட்டை வைக்கும் அளவு இடம் (கிடைப்பது), உலகத்தையும் அதிலிருப்பவற்றையும் விடச் சிறந்ததாகும். காலையில் சிறிது நேரம் அல்லது மாலையில் சிறிது நேரம் இறைவழியில் செல்வது உலகத்தையும் அதிலிருப்பவற்றையும் விடச் சிறந்ததாகும்’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன்.
அறிவிப்பவர் : ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரலி), ஆதாரம் : புகாரி

- **வழிப்போக்கனைப் போல இவ்வுலகில் வாழ வேண்டும்:**

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அறிவித்தார்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என் தோளைப் பிடித்துக் கொண்டு ‘உலகத்தில் நீ அந்நியனைப் போன்று, அல்லது வழிப் போக்கனைப் போன்று இரு’ என்றார்கள்.

அறிவிப்பாளர்களில் ஒருவரான முஜாஹித்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ‘நீ மாலை நேரத்தை அடைந்தால் காலைவேளையை எதிர்பார்க்காதே! நீ காலை வேளையை அடைந்தால் மாலை நேரத்தை எதிர்பார்க்காதே! நீ நோய்வாய்ப்படும் நாளுக்காக உன்னுடைய ஆரோக்கியத்தில் சிறி(து நேரத்)தைச் செலவிடு. உன்னுடைய இறப்பு(க் குப் பிந்திய நாளு)க்காக உன்னுடைய வாழ்நாளில் சிறி(து நேரத்)தைச் செலவிடு’ என்று இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுவார்கள். (ஆதாரம் : புகாரி)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 FEBRUARY**

**மலர்: 8 இதழ்: 5 பிப்ரவரி 2015 விலை: ரூ. 5**

## பொருளடக்கம்


| | |
|---|---|
| தாய்மதம் திரும்புதல் என்றாலென்ன? | 2 |
| மலைகளைக் குடைந்து வீடுகள் அமைத்தோர் | 5 |
| ஈயிடம் இழந்ததை மீட்க முடியுமா? | 8 |
| நோயும் மருந்தும் ஈயில் உண்டு | 10 |
| பிறர்நலம் விழையும் ஜீவராசிகள் | 12 |
| மறுமைக்காக உழைக்க விரும்புவோருக்காக... | 14 |
| மதநல்லிணக்கம் எவ்வாறு? | 15 |
| பிரார்த்தனைப் பலகை | 17 |
| ஐஎஸ்ஐஎஸ் இயக்கம் யாருடையது? | 18 |
| வாரிசுகளாலேயே கொல்லப்படும் வயதான பெற்றோர் | 21 |
| வாசகர் எண்ணம் | 23 |
| நபிகளாரின் நற்பண்புகள் | 24 |


published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

**ஆசிரியர் உரை**

# தாய்மதம் திரும்புதல் என்றால் என்ன?

**ஒன்றே மனித குலம்**

மனிதர்கள் அனைவரும் ஒரே ஒரு ஆண் – பெண் ஜோடியில் இருந்து உருவாகி பல்கிப் பெருகியவர்களே என்பதே உண்மை. நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்பதையும் பிறப்பால் சமமானவர்களே என்பதையும் நவீன அறிவியலும் இன்று நிரூபித்து நிற்கிறது. ஆனாலும் இவ்வுண்மை சக மனிதர்கள் மீது நிறத்தின் குலத்தின் இனத்தின் மேன்மையைக் கூறி ஆதிக்கம் செலுத்துவதற்காக சில சுயநல சக்திகளால் அவ்வப்போது மறைத்து வைக்கப்படுகிறது. இந்த சக்திகள் இந்த ஆதிக்கத்தின் மூலம் சகமனிதர்களை ஆன்மீக ரீதியாக அடிமைப்படுத்தி அவர்களின் பொருளாதாரங்களையும் உழைப்பையும் சுரண்டுவதோடு அவர்களில் பிரிவினை விதைக்கிறார்கள். நலிந்தவர்களை தீண்டத்தகாதவர்களாக ஏனைய சமூகங்களில் இருந்து விலக்கி வைக்கிறார்கள். இந்த அடிமைத்தளையை உடைத்தெறியும் முகமாக இவ்வுலகையும் மனிதர்களையும் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் தனது வேதத்தில் எச்சரிக்கிறான்:.

“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான் அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். ........நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.’ (திருக்குர்ஆன் 4:1)

(அல்லாஹ் என்றால் ‘வணக்கத்துக்குரிய ஒரே இறைவன்’ என்று பொருள்)

**மனிதகுலம் பூமிக்கு வந்ததன் பின்னணி**

முதல் மனித ஜோடியைப் படைத்து அவர்களை சொர்க்கத்தில் குடியமர்த்திய பின் அவர்கள் அதன் அருமைபெருமைகளை உணராத காரணத்தினால் செய்த ஒரு தவற்றின் காரணமாக அங்கிருந்து பூமிக்கு அனுப்பப் பட்டார்கள். உரிய முறையில் உழைத்து அதன்பின் ஒரு பொக்கிஷத்தை அடைந்தால்தான் அதன் உண்மை மதிப்பை உணரமுடியும் என்ற அடிப்படையில் மீண்டும் சொர்க்கத்தைப் பரிசாக அடையும் முகமாக இந்த பூமியை ஒரு தற்காலிக பரீட்சைக் கூடமாக அமைத்துள்ளான் நம் இறைவன். அந்த நிகழ்வைப் பற்றி அவன் தன் இறுதி வேதத்தில் இவ்வாறு கூறுகிறான்:

*20:123.* “இதிலிருந்து நீங்கள் இருவரும் சேகரமாக இங்கிருந்து வெளியேறி விடுங்கள். உங்க(ள் சந்ததிக)ளில் சிலருக்குச் சிலர் பகைவர்களாகவே யிருப்பார்கள் அப்பொழுது நிச்யமாக என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி

**வரும் எவர் என்னுடைய நேர்வழியைப் பின் பற்றி நடக்கிறாரோ அவர் வழி தவறவும் மாட்டார், நற்பேறிழக்கவும் மாட்டார்.**

இவ்வசனத்தில் கூறப்படும் நேர்வழியே இன்று இஸ்லாம் என்று அரபுமொழியில் அறியப்படுகிறது. இஸ்லாம் என்றால் அதன் பொருள் கீழ்படிதல் என்பது. அதன் இன்னொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் நமக்கு கற்றுத்தரும் கட்டுப்பாடான (***discipline***) வாழ்வை மேற்கொண்டு வாழ்தலே இஸ்லாம் என்பதாகும். அவ்வாறு வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கையிலும் அமைதி பெறலாம். மறுமையிலும் சொர்க்கம் சென்றடையலாம் என்பது இந்த இறைமார்க்கம் முன்வைக்கும் தத்துவமாகும்

மனித குலத்தின் ஆரம்பத்தில் அருளப்பட்ட அதே மார்க்கம்தான் ஒவ்வொரு காலகட்டங்களிலும் எங்கெல்லாம் நம் குடும்பங்கள் பரவியதோ அங்கெல்லாம் பற்பல தூதர்கள் மூலம் மீணடும் மீணடும் அறிமுகம் செய்யப் பட்டது. அதே மார்க்கமே இறுதியாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மூலம் மறு அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. நபிகள்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''எல்லாக் குழந்தைகளும் இயற்கை மார்க்கத்திலேயே பிறக்கின்றன. பெற்றோர்கள்தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டும் திருப்பி) யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ, நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.'' (நூல்: புகாரி எண் 4775)

ஆக, தாய்மதம் என்பது இந்த இயற்கை மார்க்கம் இஸ்லாமே என்பது தெளிவாகிறது. தாய்மதத்தின் முக்கிய அடிப்படை உலகில் காணும் அனைத்து மனிதர்களும் பாகுபாடுகள் இன்றி ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் நம் அனைவருக்கும் இறைவன் ஒரே ஒருவனே என்பதும் ஆகும். இவ்வுலக வாழ்வைத் தொடர்ந்து அந்த இறைவனிடம் மீண்டு செல்ல உள்ளோம் என்பதும் இவ்வுலகில் மேற்கூறியவாறு இறைவனது வழிகாட்டுதல் படி வாழ்ந்தோர் சொர்க்கத்தையும் மறுத்தவர்கள் நரகத்தையும் அடைகிறார்கள் என்பது தாய்மதம் கற்பிக்கும் அடிப்படை நம்பிக்கையாகும்.

**இந்த தாய்மதத்தில் இருந்து மக்கள் ஏன் பிரிந்தார்கள் ?**

இறைவனின் தூதர்கள் படைத்த இறைவன் ஒருவனையே வணங்கி வரவேண்டும் என்றும் அவனல்லாது எந்த படைப்பினங்களையும் வணகலாகாது என்றும் கண்டிப்பான முறையில் தத்தமது மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அதனடிப்படையில் ஆங்காங்கே தர்மத்தையும் நிலைநாட்டினார்கள். ஆனால்

இறைத்தூதர்களின் மறைவுக்குப் பிறகு பிற்கால மக்கள் ஷைத்தானின் தூண்டுதலால் அவர்களின் போதனைக்கு மாற்றமாக இறைத்தூதர்களுக்கும் மற்ற புண்ணியவான்களுக்கும் நினைவுச் சின்னங்கள் எழுப்பினார்கள்.

நாளடைவில் அவற்றையே வழிபடவும் ஆரம்பித்தார்கள். இவ்வாறு மக்கள் உயிரற்ற உணர்வற்ற ஜடப் பொருட்களை எல்லாம் கடவுள் என்று நம்பத் துவங்கியதால் உண்மையான இறை உணர்வும் பயபக்தியும் சிதைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து மக்கள் தயக்கமின்றி பாவங்கள் செய்யத் தலைப்பட்டனர். இவற்றோடு கடவுள் பெயரால் மக்களைச் சுரண்டிப் பிழைக்க இடைத்தரகர்களும் அவர்கள் அவிழ்த்துவிட்ட மூடநம்பிக்கைகளும் என பல தீமைகளும் சேர்ந்து பூமியில் அதர்மத்தை வளர்த்தன.

இவ்வாறு அதர்மம் பரவிய போதெல்லாம் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக மீண்டும்மீண்டும் இறைத் தூதர்கள் அனுப்பப் பட்டனர். அவர்கள் மேற்கண்ட அடிப்படை போதனைகளை மக்களிடையே விதைத்து மீண்டும் தர்மத்தை நிலை நாட்டிவிட்டுச் சென்றனர். அந்த இறைத்தூதர்கள் வரிசையில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.

அதர்மம் அந்தந்தக் காலத்து இறைதூதர்களின் பெயரால் அல்லது நாட்டின் பெயரால் அல்லது வமிசத்தின் பெயரால் மதமாக அறியப்படும். ஆனால் தாய்மதமோ 'இறைவனுக்கு கீழ்படிதல்' என்ற பண்புப் பெயரால் அறியப்படும்!

**தாய்மதத்தின் முக்கிய இலக்கணங்கள்**

- ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்பதை அசைக்கமுடியாத அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
- மானிட சமத்துவத்தையும் உலக சகோதரத்துவத்தையும் வலியுறுத்தும். அவற்றை நிலைநாட்டும். பிரிவினை வாதங்களுக்கு துணை போகாது.
- மனித இனத்தை பீடித்திருக்கும் சமூகத் தீமைகளில் இருந்தும் அடிமைத்தளைகளில் இருந்தும் விடுவிக்க தீர்வுகள் காணும். ஆன்மிகம் மட்டும் கூறிக்கொண்டு இராமல் மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டக் கூடியதாக இருக்கும்.
- இடைத்தரகர்களுக்கும் கடவுளின் பெயரால் சுரண்டல்களுக்கும் துறவறத்துக்கும் இடமளிக்காது எளிமையான நடைமுறை சாத்தியமான வழிபாட்டைக் கற்பிக்கும்.

# பொறுமைக்குப் பிரதிபலன் சொர்க்கம்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் கூறினான்: இறைநம்பிக்கையுள்ள என் அடியார், அவருக்குப் பிரியமான ஒருவரின் உயிரை நான் கைப்பற்றிவிடும்போது நன்மையை நாடிப் பொறுமை காத்தால், சொர்க்கமே அவருக்கு நான் வழங்கும் பிரதிபலனாக இருக்கும்".

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி

### திருக்குர்ஆன் கூறும் வரலாற்றுச்சுவடுகள்

# மலைகளைக் குடைந்து வீடுகள் அமைத்தோர்!

சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் ஹிஜ்ர் என்ற ஊரில் வாழ்ந்த கோத்திரம்தான் ஸமூது கூட்டத்தினர். அவர்களை நெறிப்படுத்த இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்தான் ஸாலிஹ் நபி.

சவுதி அரேபியாவில் உள்ள மதாயின் ஷாலிஹ் என்ற இடத்தில் பெரும்பாறைகளை குடைந்து அவர்கள் வாழ்ந்த குகை வீடுகள் இப்போதும் உள்ளன. மதீனாவிலிருந்து 405 கிலோமீட்டர் தொலைவில் வடக்கு திசையில் மதாயின் ஷாலிஹ் உள்ளது. அல் ஊலா என்ற ஊரிலிருந்து 22 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த நகரம் அமைந்துள்ளது. அங்குதான் ஹிஜ்ர் பகுதி உள்ளது. இப்போது அதை 'மதாயின் ஸாலிஹ்' -(ஸாலிஹ் (அலை) அவர்கள் வசித்த ஊர்) என்று அழைக்கின்றார்கள்.

இந்த மக்கள் பேசிய மொழி அரபி மொழியாகும். இறைவன் அனுப்பிய தூதர்களில் அரபுகளாக அறியப்படுபவர்கள் நான்கு பேர். 1.நபி ஹூத், 2. நபி ஷுஐப், 3.நபி சாலிஹ், 4.நபி முகமது. (அவர்கள் அனைவர் மீதும் இறைசாந்தி உண்டாவதாக)

கடும் பலம் வாய்ந்த சமுதாயமாக படைக்கப் பட்டிருந்த ஸமூத் கூட்டத்தினர் சிலைகளை வணங்கிக் கொண்டும், ஆடம்பர வாழ்க்கையில் திளைத்துக் கொண்டும், மலைகளைக் குடைந்து, கோட்டைகள் கட்டி வாழ்ந்தும் வந்தார்கள். தோட்டங்களும் நீரூற்றுக்களும் வேளாண்மைகளும் பேரீத்தத் தோட்டங்களும் அங்கு மிகுந்து காணப்பட்டன.

இவர்கள் வீட்டின் வாயில்கள் மிகவும் உயரமாக உள்ளது. அந்த அளவு உயரமான மக்களாக இருந்துள்ளனர். மலைகளையே குடைந்து வீடு அமைப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. அத்தகைய வலிமை மிக்க சமூகமாக இவர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

இன்று போகும் வழியெங்கும் அந்த ஊர் இறைவன் சாபத்திற்குரிய ஊர் என்பதை நினைவுபடுத்தும் முகமாக எங்கும் அழிவின் காட்சிகள் காணக்கிடைக்கின்றன.

இங்கு வாழ்ந்தோர் பற்றி இறைவன் தம் திருமறைக் குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்.

- (இவ்வாறே ஸமூது சமூகத்தாரான) மலைப்பாறை வாசிகளும் (நம்) தூதர்களைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு நாம் நம் அத்தாட்சிகளைக் கொடுத்தோம் அவர்கள் அவற்றைப் புறக்கணித்தவர்களாகவே இருந்தார்கள்.

அச்சமற்றுப் பாதுகாப்பாக வாழலாம் எனக்கருதி, அவர்கள் மலைகளைக் குடைந்து வீடுகளை அமைத்துக் கொண்டார்கள்.(குர்ஆன் 15:80–82)

ஸமூது கூட்டத்தினர் ஒன்பது வன்முறை கூட்டத்தினர்களாக இருந்து பல தெய்வ வணக்கம் செய்தல், கொள்ளை அடித்தல், அக்கிரம செயல்கள் புரிதல் போன்றவைகளில் பரவலாக ஈடுபட்டனர்.

அவர்களிடம் இறைத்தூதராக அனுப்பப்பட்ட ஸாலிஹ் (அலை) அவர்கள் ஏக இறைவழிபாட்டை போதித்தார். கற்பனைக் கடவுள்களை விட்டுவிட்டு உலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனை வழிபட அழைத்தார். இறைவனுக்கு கட்டுப்பட்டு வாழவேண்டியதன் அவசியத்தையும் மறுமை வாழ்வு பற்றியும் எச்சரித்தார்..

**“இன்னும், ஸமூது (கூட்டத்தினர்) பால் அவர்கள் சகோதரர் ஸாலிஹை (நம் தூதராக அனுப்பினோம்). அவர் சொன்னார்: “என் சமூகத்தாரே! அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு நாயன் இல்லை. அவனே உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கி, அதிலேயே உங்களை வசிக்கவும் வைத்தான். எனவே, அவனிடமே பிழை பொறுக்கத் தேடுங்கள் இன்னும் பாவமன்னிப்பு கோரி அவன் பக்கமே மீளுங்கள். நிச்சயமாக என் இறைவன் (உங்களுக்கு) மிக அருகில் இருக்கின்றான் (நம் பிரார்த்தனைகளை) ஏற்பவனாகவும் இருக்கின்றான்.” (அல்குர்அன் *11:61*)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் என்று பொருள்)

ஆனால் அம்மக்கள் இறைத்தூதரின் அறிவுரைகளை ஏற்க மறுத்தனர்.

**‘ஸாலிஹே! இதற்கு முன் எங்களிடம் நம்பிக்கைக்குரியவராக இருந்தீர். எங்கள் முன்னோர்கள் எதை வணங்கினோமோ அதை நாங்கள் வணங்குவதை விட்டும் எங்களைத் தடுக்கின்றீரா? நீர் எதற்கு எங்களை அழைக்கிறீரோ அதில் பெரும் சந்தேகத்தில் இருக்கிறோம்‘ என்று அவர்கள் கூறினர். (குர்ஆன் *11:62*)**

நீங்கள் இறைத்தூதர் என்பதற்கு ஏதேனும் அத்தாட்சியை கொண்டு வந்தால்தான் உங்களை நபியாக ஏற்போம் என்றனர் அம்மக்கள். இவ்வாறு முறையிடுவது அவர்களுக்கு சோதனையாகவும் தண்டனையாகவும் அமைந்து விடும் என்பதை புரியாத அவர்கள் தம் கோரிக்கையில் பிடிவாதமாகவும் இருந்தனர்.

அப்பொழுது இறைவன் அதிசயமான உருவத்துடன் ஒரு ஒட்டகத்தை படைத்து அவர்களிடையே நடமாடச் செய்தான். அவ்வொட்டகத்தை எந்த ஒரு துன்பமும் செய்யாமலிருக்க கட்டளையிட்டான்.

நான் இறைவனின் தூதராவேன் என்பதற்கு இதோ நீங்கள் கேட்ட அத்தாட்சி! இதனை எந்த தொந்தரவும் செய்யாமல் பூமியில் மேய விட்டு விடுங்கள்! அதற்கென தண்ணீர் அருந்தும் நாள் ஒன்றை ஒதுக்கிவிடுங்கள்! இதற்கு தீங்கிழைத்தால் இறைவனின் தண்டனையை சந்திக்க நேரிடும் என்று ஸாலிஹ் (அலை) அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள்.

“அன்றியும், என் சமூகத்தாரே! உங்களுக்கு ஓர் அத்தாட்சியாக, இதோ இது அல்லாஹ்வுடைய (ஒரு) பெண் ஒட்டகம் ஆகவே, அல்லாஹ்வின் பூமியில் (எதேச்சையாக) அதை மேய விட்டு விடுங்கள் எந்த விதமான தீங்கும் செய்யக்கருதி அதைத் தீண்டாதீர்கள் (அப்படி நீங்கள் செய்தால்) அதிசீக்கிரத்தில் உங்களை வேதனை பிடித்துக் கொள்ளும்” (என்று கூறினார்). (குர்ஆன் *11:64*)

அந்த சமுதாயத்தில் மதிப்பும், பலமும் வாய்ந்த, திமிர் பிடித்த ஒருவன் ஸாலிஹ் (அலை) அவர்களின் உபதேசத்தையும், எச்சரிக்கையும் மீறி அந்த அற்புத ஒட்டகத்தை அறுத்து விட்டு, “ஸாலிஹே! நீர் உண்மையில் இறைவனின் தூதராக இருந்தால் நீர் வாக்களித்த தண்டனையை கொண்டு வாரும்!” என்றான். தொடர்ந்து நடந்ததை திருக்குர்ஆனில் இருந்தே அறிவோமே:

ஆனால் அவர்கள் அதனை கொன்று விட்டார்கள் ஆகவே அவர் (அம்மக்களிடம்): “நீங்கள் உங்களுடைய வீடுகளில் மூன்று நாள்களுக்கு சுகமனுபவியுங்கள் (பின்னர் உங்களுக்கு அழிவு வந்துவிடும்.) இது பொய்ப்பிக்க முடியாத வாக்குறுதியாகும் என்று கூறினார்.

நமது கட்டளை வந்த போது ஸாலிஹையும் அவரோடு ஈமான் கொண்டவர்களையும் நமது அருளால் காப்பாற்றினோம். மேலும் அன்றைய நாளின் இழிவிலிருந்தும் (காப்பாற்றினோம்,) நிச்சயமாக உமது இறைவன் வல்லமை மிக்கவன் மிகைத்தவன்.

அநியாயம் செய்து கொண்டிருந்தவர்களை (பயங்கரமான) பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது. அதனால் அவர்கள் தங்கள் வீடுகளிலேயே அழிந்து போய்க் கிடந்தனர். (குர்ஆன் *11:65–67*)

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் தபூக் யுத்தத்திற்கு செல்லும் போது அவ்விடங்களைக் கடந்து செல்ல நேரிட்டது. வாகனத்தில் அமர்ந்தபடியே போர்வையால் தம்மை மறைத்துக் கொண்டு அந்த இடங்களை விட்டும் விரைவாகக் கடந்தார்கள்.

ஹிஜ்ர் பகுதியில் உள்ள கிணற்றில் தண்ணீர் அருந்தவோ, தண்ணீர் நிரப்பிக் கொள்ளவோ வேண்டாம் என்று நபி (ஸல்) அவர்கள் தோழர்களுக்கு கட்டளையிட்டார்கள். நாங்கள் நீரை நிரம்பிக் கொண்டோம். அந்த தண்ணீரைக் கொண்டு மாவும் பிசைந்து விட்டோமே! என்று நபித் தோழர்கள் கூறியபோது, தண்ணீரை ஊற்றி விடுங்கள்! மாவையும் வீசி விடுங்கள்! என்று நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அக்கிரமம் புரிந்தவர்களின் வசிப்பிடங்களில் அவர்களுக்கு கிடைத்த தண்டனை போன்று உங்களுக்கும் கிடைத்துவிடுமோ என்ற அச்ச உணர்வுடனும் அழுதவாறும் நுழையுங்கள் என்று உபதேசித்தார்கள். (ஆதாரம்: புகாரி 3377, -3381)

நன்றி: சுவனப் பிரியன்

**’ஈ’ தாங்கி நிற்கும் இரு அறிவியல் பாடங்கள்**

# ஈயிடம் இழந்ததை மீட்க வழியண்டா?



இறைவனின் படைப்பினங்கள் ஒவ்வொன்றும் இறைவனின் உள்ளமையையும் அவனது வல்லமையையும் எடுத்துக்கூறும் அத்தாட்சிகளாக விளங்குகின்றன. அவை ஒவ்வொன்றும் தன்னகத்தே பற்பல அற்புதங்களையும் திட்டங்களையும் செயற்திறனையும் தாங்கி நிற்கின்றன. நாம் அற்பமாக கருதும் கொசு, ஈக்கள், சிலந்தி, போன்ற சிறு உயிரினங்களும் இதற்கு விலக்கல்ல. அப்படிப்பட்ட ஓர் உயிரினமான ஈயை உதாரணமாக கூறி தன் வல்லமையை அறிவுறுத்துகிறான் இந்த வசனத்தில்...

**“மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவி தாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக, அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூட படைக்க முடியாது இன்னும் அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடமிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது தேடுவோனும், தேடப்படுவோனும் பலஹீனர்களே!” (திருக்குர்ஆன்.22:73)**

திருக்குர்ஆன் என்பது இவ்வுலகைப் படைத்த இறைவன் மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக தனது தூதர் மூலம் கற்றுத்தரும் அறிவுரைகளின் தொகுப்பாகும். மனிதனை சிந்திக்கவைத்து அவன் உண்மைகளைப் பகுத்தறியட்டும் என்பதற்காக அவனது படைப்பினங்களின் உதாரணங்கள் பலவற்றை திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான். பாமரர்களையும் படித்தவர்களையும் அவரவர் பாணியில் சிந்திக்கவைத்து உண்மைகளை உணரத்தூண்டுவது திருக்குர்ஆனின் மற்றொரு சிறப்பாகும்.

கற்றோரும் கல்லாதோரும் சிந்திக்காத காரணத்தால் செய்துவரும் ஒரு - போலிதெய்வ வழிபாடு என்ற - பாவத்தை அவர்களுக்கு உணர்த்தும் வண்ணம் அமைந்த இந்த வசனம் நவீன அறிவியல் கண்டுபிடித்த ஒரு உண்மையைத் தாங்கி நிற்கிறது.

**ஈ பற்றிய உண்மைகள்**

சிக்கல் நிறைந்த (*complicated*) உடலமைப்புக் கொண்ட ஈயைப் பற்றிய விபரம் திருக்குர்ஆன் இறங்கிய ஆறாம் நூற்றாண்டு மக்களுக்கு நிச்சயமாக தெரிய வாய்ப்பில்லை. அது எவ்வாறு உணவு உட்கொள்கிறது என்பதும் எவருக்கும் தெரியாது. இந்த ஈக்களில் சுமார் 30,000 வகைகள் உள்ளன.

ஒரு ஜோடி இறக்கைகொண்ட ஈயானது நொடிக்கு 1000 தடவை தன் சிறகை அடிக்கும் தன்மை கொண்டது. மணிக்கு 5 கி.மீ. பறக்கும் திறனுடையது. அதன் ஒவ்வொரு கூட்டுக் கண்களிலும்(***compound eye***) சுமார் 4000 லென்ஸ்கள் உள்ளன. தன்னுடைய நுகரும் தன்மையைக்கொண்டே உணவுகளைத் தேடுகின்றன. ஈக்களுக்கு உணவை மென்று அரைத்துத் தின்னும் பற்கள் கிடையாது. ஆகவே ஈயானது திட உணவுப்பொருள்களை நேரடியாக வாயில் வைத்து மென்று தின்ன முடியாது.

திரவ நிலையில் உள்ள உணவுகளை தனது வாயில் உள்ள ***(Proboscis***) ஸ்பான்ஜ் போன்ற உறுப்பால் ஒற்றி உறிஞ்சிக்கொள்ளும். திட உணவாக இருப்பின் தனது உமிழ்நீரை அப்பொருளில் உமிழ்ந்து அதைக்கரைத்து நீர்ம நிலையில் உறிஞ்சி நேரடியாக வயிற்றுக்குள் அனுப்புகிறது. இந்த அறிவியல் உண்மைகள் எல்லாம் பொருள்களை பெரிதாக்கிக்காட்டும் மைக்ராஸ்கோப் சுமார் 500 ஆண்டுகளுக்கு பின்பு கண்டுபிடித்ததன் பின்னரே அறிய முடிந்தது.

ஈ எவ்வாறு திட உணவுப் பொருள் திரவமாக மாற்றி எடுத்துக்கொள்கிறது என்பதை இன்றைய அறிவியல் நமக்கு தெளிவாக விளக்குகிறது. ஈ ஒரு உணவுப்பொருளில் அமர்ந்து ஒரு வித (நொதியை) எச்சிலை உமிழ்ந்து திடப்பொருளை திரவமாக்கி உறுஞ்சி, நேரடியாக வயிற்றுக்கு அனுப்பி விட்டால் நாம் அப்பொருளை மீண்டும் கைப்பற்ற முடியாது. இதைத்தான் இறைவன் ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பு "**ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடமிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது**" என்று கூறுகிறான்.

தகவல்: ***http://www.softschools.com/fac…/animals/house_fly_facts/552/***

ஆறாம் நூற்றாண்டின் பாலைவனத்துப் பாமர மக்களுக்கும் இந்த நூற்றாண்டின் அறிவியல் முன்னேற்றம் கண்டு நிற்கும் அறிவு ஜீவிகளுக்கும் ஒரே வசனம் மூலம் அவரவர் அறிவுமுதிற்சிக்கேற்ப சிந்திக்க வைக்கிறதென்றால் இதனை இயற்றியவன் இறைவனன்றி வேறு யார்?

# போதுமென்ற மனமே உண்மையான செல்வமாகும்

"(வாழ்க்கை) வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று. மாறாகப் போதுமென்ற மனமே (உண்மையான) செல்வமாகும்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி

## 'ஈ' தாங்கி நிற்கும் இரு அறிவியல் பாடங்கள்

# நோயும் மருந்தும் ஈயில் உண்டு!

ஈயைப்பற்றிய இரண்டாவது அறிவியல் உண்மையை நபி (ஸல்) அவர்கள் அறிவித்த ஒரு ஹதீஸின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"உங்களில் ஒருவரது பாத்திரத்தில் ஈ விழுந்து விட்டால் (முதலில்) அதை அவர் (அதிலேயே) முக்கி அமிழ்த்தட்டும். பிறகு அதை வெளியில் எடுத்துப் போட்டு விடவும். ஏனெனில் ஈயின் இரண்டு இறக்கைகளில் ஒன்றில் நோயும், மற்றொன்றில் நிவாரணமும் உள்ளது." - அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி). (புஹாரி.3320)

பொதுவாக ஈயானது அசிங்கமான, சுகாதாரக்கேடான இடங்களிலும் கழிவுப் பொருள்கள் தேங்கும் இடங்களிலும் அதிகம் இருக்கும். கிருமி தாக்குதலுக்குறிய இடங்களில் வசித்தாலும் அவைகளினால் ஈக்கள் இறப்பதில்லை. மேலும் ஈயினால் சுமார் 100 வகையான நோய்கள் ***(Pathogens)*** பரவுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.ஆனாலும் ஈக்களின் உடலிலேயே இறைவன் அதிகமான நோய் எதிர்ப்பு சக்தியை வைத்திருப்பதால் அவைகள் பாக்டீரியா, மற்றும் வைரஸ் கிருமிகளால் தாக்கப்படுவதில்லை.

ஆக, ஈயானது நோயை கொண்டு செல்லும் அதே நேரத்தில் அந்நோய்க்கான பரிகார நிவாரணத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதைத்தான் நபி(ஸல்) அவர்கள் இரைவனிடமிருந்து பெற்ற செய்தி மூலம் அன்றே குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வுண்மையை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்தியுள்ளன. கடந்த அக்டோபர் மாதம், வார அறிவியல் (***22oct. 2014***) இதழ்களில் ஒரு ஆய்வுச் செய்தியை வெளியிட்டனர். அதாவது ஈயின் மரபணு முழுவதையும் ஆராய்ந்து பார்த்ததில் மனிதர்களை நோய் தாக்குவதிலிருந்து காப்பாற்றும் நோய் எதிர்ப்பு வழிமுறை ஈயின் மரபணுவில் இருப்பதாக அறிவித்தனர்.

***"House fly genome offers clue to human sickness"-By Michelle Roberts Health editor, BBC News online-16 oct.2014.***

***"House fly genome reveals expanded immune system"- By Krishna Ramanujan CORNEL CHRONOCLE-Cornel University. October 22, 2014***

***http://www.sciencedaily.com/releases/2014/…/141014170843.html***

***http://blogs.biomedcentral.com/…/house-fly-genome-could-rev…***

இதுவரை அறியப்பட்டுள்ள மனித நோய்களின் மரபணுகளில் நான்கில் மூன்று பங்கு மரபணுக்கள் இந்த ஈயின் மரபணுக்களுடன் ஒத்துள்ளன. இந்த ஈக்கள் ஒவ்வொரு நாள் இரவிலும் உறங்கச் செல்கின்றன. மயக்க மருந்துக்கு மனிதர்களைப் போலவே எதிர்வினையாற்றுகின்றன. அனைத்துக்கும் மேலாக மிக விரைவாக இனப்பெருக்கம் செய்கிறது. ஒரு

பதினைந்து நாட்களுக்குள் முற்றிலும் புதியதொரு தலைமுறையை உருவாக்குகிறது.

அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழகம், ஆறு பெண் ஈக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அவைகளின் 15345 ஜீன்களை பிரித்து வகைப்படுத்தினர். இவற்றுள் நோயை பரப்பும் ஜீன்கள் ***(animal pathogens)*** மற்றும் நோய் எதிர்ப்பு ஜீன்களை ***(Immune system & Detoxification genes)*** ஆய்வு செய்தனர். வீட்டு ஈயின் குடும்பத்தைச் சார்ந்த பழ ஈ ***(Fruit Fly)*** ன் நோய் எதிர்ப்பு ஜீன்களைக்காட்டிலும் வீட்டு ஈயின் நோய் எதிர்ப்பு ஜீன்கள் மிக அதிகளவில் இருப்பது ஆய்வாளர்களை ஆச்சரியப்படுத்தியது.

***Detoxification*** என்று சொல்லப்படும் ***(cytochrome P450 genes)*** ஜீன்கள் பழ ஈயில் 85 மட்டுமே உள்ளது. நமது வீட்டு ஈயில் இந்த ஜீன்கள் 146 உள்ளது. அது மட்டுமல்லாமல் அளவில் ஐந்து மடங்கு மிகப்பெரியதாகவும் இருந்தது. ஈயின் நோய் எதிர்ப்பு ஜீன் மற்றும் விஷமுறிவு ஜீன்களை தனியாக பிரித்தெடுப்பதன் மூலம் மனிதர்களுக்கு வரக்கூடிய நோய்களை தடுப்பதற்கும் மற்றும் சுகாதாரக் கேடான இடங்களில் உருவாகும் கிருமிகளை கட்டுப்படுத்தவும் இவை பெரிதும் பயன்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ***.(http://genomebiology.com/2014/15/10/466)***

இறைவனின் தூதர் அன்று சொன்னது இன்று அறிவியல் அறிஞர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. 1400 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறு ஈ உண்ணும் முறையை அதாவது உணவுப்பொருளை நீர்ம கூழாக்கி நேரடியாக வயிற்றுக்கு அனுப்பும் செய்தியையும், அதன் உடலில் நோய் எதிர்ப்பு மற்றும் விஷமுறிவு நிவாரணியும் உள்ளது என்பதை படைத்த இறைவனைத் தவிர வேறு எவரும் அறிவிக்க முடியாது.

**“நிச்சயமாக இரவும்,பகலும் மாறி வருவதிலும், வானங்களிலும்,பூமியிலும் இறைவன் படைத்துள்ள அனைத்திலும் பயபக்தியுள்ள மக்களுக்கு (நிரம்ப) அத்தாட்சிகள் இருக்கின்றன.” (திருக்குர்ஆன் *10:6*)**

நன்றி: எஸ்.ஹலரத் அலி.

# மறுமையில் நற்பலன் குன்றியவர்கள்

‘(இம்மையில் செல்வம்) அதிகம் உள்ளவர்களே மறுமை நாளில் (நற்பலன்) குறைந்தவர்கள் ஆவர் ஒரு சிலரைத் தவிர, அவர்களுக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கினான். அதை அவர்கள் தம் வலப் பக்கமும் இடப் பக்கமும் தம் முன் பக்கமும் பின் பக்கமும் வாரி வழங்கி அச்செல்வத்தால் நன்மை புரிகிறார்கள். (இவர்களைத் தவிர)’ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதர் (ரலி), ஆதாரம் : புகாரி (நீண்ட ஹதீஸின் ஒரு பகுதி).

# பிறர்நலம் விழையும் ஜீவராசிகள்

ஐந்தறிவு ஜீவிகளிடம் இருந்தும் மனிதன் பெறவேண்டிய பல பாடங்களை திருக்குர்ஆனில் இறைவன் இடம்பெறச்செய்துள்ளான்.

## ● எறும்பிடம் காணும் சமூகப் பொறுப்புணர்வு!

இறைவன் தனது தூதர்களில் ஒருவரான சுலைமான் (சாலமன்) (அலைஹிஸ்ஸலாம் - அவர் மீது சாந்தி உண்டாவதாக) அவர்களுக்கு ஒரு சிறப்பு அருட்கொடையாக மாபெரும் அரசாட்சியும் பறவைகள், எறும்புகள் போன்ற ஐந்தறிவு ஜீவிகளின் மொழிகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் வழங்கியிருந்தான். மட்டுமல்ல இவற்றையும், காற்று, ஜின் இனம் போன்றவற்றின் மீது தனி ஆற்றலையும் அவருக்கு வழங்கியிருந்தான்.

ஒருமுறை சுலைமான்(அலை) அவர்கள் தன் பட்டாளத்துடன் போகும் போது நடந்த சம்பவம் பின்வருமாறு திருக்குர்ஆன் கூறுகிறது:

**27:18. இறுதியாக, எறும்புகள் நிறைந்த இடத்திற்கு அவர்கள் வந்த போது ஓர் எறும்பு (மற்ற எறும்புகளை நோக்கி) "எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள் ஸுலைமானும் அவருடைய சேனைகளும், அவர்கள் அறியாதிருக்கும் நிலையில் உங்களை நசக்கி விடாதிருக்கும் பொருட்டு (அவ்வாறு செய்யுங்கள்)" என்று கூறிற்று.**

**27:19. அப்போது அதன் சொல்லைக் கேட்டு, அவர் புன்னகை கொண்டு சிரித்தார். இன்னும், "என் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள் செய்வாயாக! இன்னும் உம் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!" என்று பிரார்த்தித்தார்.**

இந்த சம்பவம் மூலம் ஓர் எறும்பு மற்றைய எறும்புகள் அழிந்துவிடக்கூடாது என்பதில் காட்டியிருக்கும் அக்கறையை உணரமுடிகிறது. எறும்புகளிடம் வெளிப்படையாகவே காணப்படும் கூட்டுறவு, சுறுசுறுப்பு, உணவு சேமிப்பு, பகிர்ந்து உண்ணுதல் போன்ற பல பழக்கங்கள் அமைதியை விரும்பும் மனிதர்கள் கற்கவேண்டிய பாடங்களாகும். இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவன் வழங்கிய வாழ்க்கைத் திட்டத்தில் திருப்தி கண்டு வாழும் சமூகத்திற்கு எறும்புகளின் கூட்டமைப்பு ஒரு சிறந்த முன்னுதாரணம் ஆகத் திகழ்கின்றது. இத்தகைய கீழ்படிதலுக்கே அரபு மொழியில் இஸ்லாம் என்று கூறுகிறோம்.

மேற்படி சம்பவம் ஆபத்து என்று வரும்போது தனது சமூகத்தை எச்சரிப்பதும் அதற்காக மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பகிர்ந்து கொள்ளவேண்டியதும் நாம் இங்கு பெறும் பாடமாகும்.

## ● மனித நிலை கண்டு கவலை கொண்ட மரங்கொத்தி!

இதே அத்தியாயம் மற்றுமொரு நிகழ்ச்சியைக் கூறுகின்றது. சுலைமான் (அலை) அவர்கள் தனது படையை பார்வையிட்டுக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஹுத்ஹுத் என்ற மரங்கொத்திப் பறவையைக் காணவில்லை. அது தாமதித்து வந்தது. இந்தப் பறவை தாமதித்து வந்ததற்கான காரணத்தை வினவிய போது அந்தப்பறவை சுலைமான் நபியிடம் பின்வருமாறு கூறியதை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

27:22. (ஹுது ஹுது பறவையைக் காணாத சுலைமான்) சிறிது நேரம் தாமதித்தார் அதற்குள் (ஹுதுஹுது வந்து) கூறிற்று "தாங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்து கொண்டேன். 'ஸபா'விலிருந்து உம்மிடம் உறுதியான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்."

27:23. "நிச்சயமாக அ(த் தேசத்த)வர்களை ஒரு பெண் ஆட்சி புரிவதை நான் கண்டேன் இன்னும், அவளுக்கு (தேவையான) ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது மகத்தான ஓர் அரியாசனமும் அவளுக்கு இருக்கிறது.

27:24. "அவளும், அவளுடைய சமூகத்தார்களும் அல்லாஹ்வையன்றி, சூரியனுக்கு ஸுஜூது செய்வதை நான் கண்டேன் அவர்களுடைய (இத்தவறான) செயல்களை அவர்களுக்கு ஷைத்தான் அழகாகக் காண்பித்து, அவர்களை நேரான வழியிலிருந்து தடுத்துள்ளான் ஆகவே அவர்கள் நேர்வழி பெறவில்லை.

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

27:25. "வானங்களிலும், பூமியிலும், மறைந்திருப்பவற்றை வெளியாக்குகிறவனும் இன்னும் நீங்கள் மறைப்பதையும், நீங்கள் வெளியாக்குவதையும் அறிபவனுமாகிய அல்லாஹ்வுக்கு அவர்கள் ஸுஜூது செய்து வணங்க வேண்டாமா?

27:26. "அல்லாஹ் – அவனையன்றி வணக்கத்திற்குரிய நாயன் (வேறு) இல்லை. (அவன்) மகத்தான அர்ஷுக்கு உரிய இறைவன்" (என்று ஹுதுஹுது கூறிற்று).

இந்தச் செய்தியை கேட்டபின், அந்தப் பெண்ணுக்கு சுலைமான் (அலை) அவர்கள் சத்தியத்திற்கு அழைப்பு விடுத்த பின்னர் அவர் இஸ்லாத்தில் இணைந்ததாக திருக்குர்ஆன் கூறுகின்றது.

ஒரு நாட்டு மக்கள் அவர்களைப் படைத்த இறைவனை வணங்குவதை விட்டுவிட்டு அவனது படைப்பினங்களில் ஒன்றான சூரியனை வணங்குவதை கண்டு ஒரு பறவை கவலை கொண்டு அதைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதை மேற்படி சம்பவத்தில் நாம் காண்கிறோம்.

● இவ்வுலகைப் படைத்த இறைவனே மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களின் நன்மைக்காக சூரியனையும் சந்திரனையும் இன்ன பிற கோள்களையும் உரிய முறையில் படைத்து பரிபாலித்து வருபவன். அனைத்துக்கும் முழுமுதற் காரணமான அவன் ஒருவன் மட்டுமே நமது வணக்கத்திற்கு உரியவன். நமது பிரார்த்தனைக்கு பதில் அளிக்கக்கூடியவன். என்பதை ஐந்தறிவு ஜீவிகள் வரை உணர்ந்துள்ளன என்பது இங்கு நாம் பெறும் முதல் பாடமாகும்.

● மக்களை உரியமுறையில் இறைவன்பால் வழிகாட்ட வேண்டும் என்ற கவலை ஒவ்வொரு இறைத்தூதர்களுக்கும் இருந்துள்ளது. அதே கவலை அந்த இறைத்தூதரின் சேவகனாகப் பணிபுரியும் அந்த ஜீவிக்கு கூட அதே கடமை உணர்வு இருந்திருப்பது கவனிக்கத்தக்கது.

# மறுமைக்காக உழைக்க விரும்புவோருக்காக...

## ● மறுமையை மறக்கடிக்கும் உலகத்தின் செல்வம்:

‘அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களுக்கு வறுமை ஏற்பட்டுவிடும் என்று நான் அஞ்சவில்லை. ஆயினும், உங்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு உலகச் செல்வம் தாராளமாகக் கொடுக்கப்பட்டதைப் போன்று உங்களுக்கும் தாராளமாகக் கொடுக்கப்பட்டு, அதற்காக அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டதைப் போன்று நீங்களும் போட்டியிட, அது (மறுமையின் எண்ணத்திலிருந்து) அவர்களின் கவனத்தைத் திருப்பிவிட்டதைப் போன்று உங்களின் கவனத்தையும் அ(ந்த உலகாசையான)து திருப்பிவிடுமோ என்றே நான் அஞ்சுகிறேன்’ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: மிஸ்வர் இப்னு மக்ரமா (ரலி), ஆதாரம் : புகாரி

## ● நம்முடைய செல்வம் எது?

“(ஒரு முறை) நபி (ஸல்) அவர்கள் ‘உங்களில் யாருக்காவது தம் செல்வத்தை விடத் தம் வாரிசுகளின் செல்வம் விருப்பமானதாக இருக்குமா?’ என்று கேட்டார்கள். தோழர்கள் ‘இறைத்தூதர் அவர்களே! எங்கள் அனைவருக்குமே (வாரிசுகளின் செல்வத்தை விட) எங்களின் செல்வமே விருப்பமானதாகும்’ என்று பதிலளித்தார்கள். ‘அவ்வாறாயின், ஒருவர் (இறப்பதற்கு முன் அறவழியில்) செலவிட்டதே அவரின் செல்வமாகும். (இறக்கும் போது) விட்டுச் செல்வது அவரின் வாரிசுகளின் செல்வமாகும்’ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி), ஆதாரம் : புகாரி

# மத நல்லிணக்கம் எவ்வாறு?

**- நியாஸ் அஹமது,** USA

இந்திய அரசியல் சாசனம் ஒருவர் தன்னுடைய மதத்தை பின்பற்றுவதையும் பிறருக்கு எடுத்து வைப்பதையும், பிரச்சாரம் செய்வதையும் தடுக்கவில்லை, ஆனால் வலுக்கட்டாயமாக பிறர்மீது திணிப்பதைதான் கண்டிக்கிறது. மத நல்லிணக்கம் உண்டாவதற்கு அனைத்து மதத்தவரும் இதனை கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஒரு மனிதர் தனது மதமல்லாத வேறொன்றை பின்பற்றுகிறார் என்ற ஒரே காரணத்துக்காக அவரை வெறுப்பது, அவரிடம் நீதமின்றி நடந்து கொள்வது எந்த ஒரு மதத்தின் மரபுகளுக்கும் எதிரானதாகும். ஒன்றே மனித குலம் ஒருவனே நம் அனைவருக்கும் இறைவன் என்பது இஸ்லாம் கற்பிக்கும் அடிப்படைக் கொள்கையாகும். அந்த அடிப்படையில் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்னும்போது சக மனிதர்களின் கொள்கைகளோடு முரண்பாடு உள்ளமைக்காக அவர்களை வெறுப்பது என்பது மிகப்பெரும் தவறே!

**முஸ்லிம் எப்படி மத நல்லிணக்கம் பேண வேண்டும்?**

முஸ்லிம் என்றால் இறைவன் கற்பிக்கும் வாழ்க்கைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்பவர். அவரைப் பொறுத்தவரையில் வணக்கத்திற்கு உரியவன் இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வருபவன் மட்டுமே என்பதைக் கொள்கையாகக் கொண்டவர். நபிகள் நாயகத்தை தன வாழ்க்கை முன்மாதிரியாக அவர் ஏற்றுக்கொண்டவராக இருந்தாலும் அவருக்கு முன்வந்த அனைத்து இறைத் தூதர்களையும் இறைவேதங்களையும் மதித்தே ஆகவேண்டும். (அவை பிற்காலங்களில் சிதைந்து காலாவதியாகி விட்டது வேறு விஷயம்).

ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நபிகளார்தான் முன் மாதிரி. நபிகளார் வாழ்ந்த காலத்திலும் அவருடய இரத்த சொந்தங்கள் அறியாமையினாலும், மனோ இச்சையினாலும் மனம் போன முறையில் பல தெய்வங்களையும், சிலைகளையும் வணங்கி வந்தனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கண்ணியமான முறையில் படைத்த இறைவனை வழிபட வேண்டிய அவசியத்தையும், அதை மறுக்கும் பட்சத்தில் மறுமையில் நடக்கும் விளைவுகளையும் எடுத்து சொன்னார்களே தவிர, யாரையும் நிர்பந்திக்கவோ, மிரட்டவோ இல்லை.

தன்னை வளர்த்த பெரிய தந்தை மரணப் படுக்கையில் இருக்கும் போது இறந்தபின் அவர் நரகத்திற்கு சென்றுவிடக் கூடாது என்ற ஆதங்கத்தில் அவரிடம் கெஞ்சிதான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள கூறினார். அவர் இறைச்செய்தியை ஏற்காமல் மரணித்தபோது நபிகளார் துக்கத்தில் பெரும்

கவலை கொண்டார்கள். அப்போது, ''நபியே உமது பணி இறைச்செய்தியை எடுத்துச் சொல்வது மட்டும்தான்.'' என எச்சரிக்கையும் விடுத்தான் இறைவன் என அறிகிறோம்.

**2:256. (இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது. ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் – அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்.**

## நபிகளார் வாழ்வில் நடந்த சில உதாரணங்கள்:

● ஒரு யூதனின் பூத உடல் அடக்கம் செய்வதற்காக வீதியில் செல்லும் போது, நபிகள் நாயகம் மரியாதைக்காக எழுந்து நின்றார் என்பது வரலாற்று பதிவு.

● கிருஸ்தவ பாதிரிமார்கள் ஒரு வேலை நிமித்தம் பள்ளி வாசலில் தங்கி இருந்போது அவர்களின் வணக்க வழிபாடுகளை செய்வதற்கு அனுமதி அளித்தார்.

● இரு சமூகத்துக்கு இடையே ஏதேனும் காரணத்துக்காக போர் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றால் அப்போதும் கூட மற்ற சமூக குருமார்களை தாக்குவதையோ, வழிபாட்டு தலங்களை இடிபதையோ நபிகளார் தடுத்திருக்கின்றார்கள்.

இதுவெல்லாம்தான் மத நல்லிணக்க செயல்கள். இங்கே மத துவேசம், மத வெறி போன்றவற்றிற்கு இடம் இல்லை. பிற மதங்களின் மீதுள்ள ஒருவருக்குள்ள மன வெறுப்பை நீக்குவதே மத நல்லிணக்கத்தின் முதல் படியும், முக்கிய படியும் ஆகும்.

## ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வோம்:

ஒரு ஹிந்து நண்பரோ, புத்த நண்பரோ விருந்துக்கு வருகின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அவரது உணவு சைவம்தான் என்பதை அறிந்து அதற்கேற்ப உணவைத் தயாரித்து அதைப் பரிமாறுகின்றோம். இது போன்று நமது நிலைகளையும், கொள்கை கோட்பாடுகளையும் அவர்களுக்கு முன்பே கூறியிருப்போமென்றால் அவர்களும் நிச்சயமாக நம்முடன் அதற்கேற்பத்தான் நடந்துகொள்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. உதாரணமாக இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் ஏக இறைவன் அல்லாதவற்றுக்காக படைக்கப்பட்டவையும் இறைவனின் பெயர் கூறி அறுக்கபாடாத பிராணிகளின் மாமிசங்களும் பன்றி மாமிசமும் தடை செய்யப்பட்டவை என்பதை நாம் அறிவோம். இதை நம் மாற்றுமத நண்பர்களுக்கு முன்பே தெரியப்படுத்தினால் அவர்கள் தங்கள்

பண்டிகைகளின் போது இந்தவகையான உணவுகளை நமக்கு வழங்குவதைத் தவிர்ப்பார்கள். இதன் படி நம் சகோதர சமூகத்தவருக்கு நமது கொள்கைகளைப்பற்றி அவர்கள் உணர்ந்து கொள்ள செய்வதன் மூலமும், அவர்களின் கொள்கைகளை நாம் அறிந்து கொள்வது மூலமாகவும் சமூகத்தில் மத நல்லிணக்கம் பேண முடியும். இந்த புரிந்துணர்வு இல்லாத பட்சம் சுயநல அரசியல்வாதிகளும் சமூகவிரோதிகளும் மத துவேஷத்தை மக்களுக்கிடையில் விதைத்து பகைமை மூட்டி கலவரங்களும் அதன்வழி தங்கள் சுயநல வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

**எம்மதமும் சம்மதமா?**

அதேவேளையில் மேற்படி புரிந்துணர்வை உண்டாக்க முயற்சிக்காமல் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் கொண்ட மதங்களையும் கொள்கைகளையும் எல்லாமே ஒன்று அனைத்துமே சம்மதம் என்று போலியாகக் கூறுவது நயவஞ்சகத்தையும் குழப்பங்களையுமே விளைவிக்கும். மதநல்லிணக்கத்திற்கு ஊறுதான் விளைவிக்கும்.

# பிரார்த்தனைப் பலகை

நான் 2009 முதல் குடும்பத்துடன் இஸ்லாத்தில் இணைந்தவன். அல்ஹம்துலில்லாஹ். எல்லாப்புகழும் இறைவன் ஒருவனுக்கே! எனது மகளுக்குத் 2007 இல் திருமணம் நடந்தது. ஆனால் இதுவரை குழந்தை பாக்கியம் இல்லை. அவளுக்குக் கற்பப்பை கோளாறுகள் நீங்கவும் குழந்தை பாக்கியம் கிடைக்கவும் பிரார்த்தனைப் பலகை மூலம் ஏகன் இறைவனிடம் பிரார்த்தனை (துஆ) செய்யுமாறு கோருகிறேன்.

மேலும் எனது மாப்பிளைக்கு நிரந்தரமான வேலை கிடைக்கவும் வறுமை நீங்கி வாழ்வாதாரம் பெருகவும் இறைவனிடம் பிரார்த்தனை செய்யுமாறு வாசகர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**B.** அப்துல்லாஹ், 34ஃ65, சிலந்தி குட்டை, 6வது தெரு, வி.வி. நகர், கொளத்தூர், சென்னை 99

----------------------------------

- வாசக சகோதர சகோதரிகள் மேற்கண்ட நண்பருக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மேற்படி சகோதரரின் அருகாமையில் உள்ள முஸ்லிம் அன்பர்கள் அவரது வறுமை நீங்க உங்களால் ஆன உதவிகளை செய்யலாமே... அவர் உங்கள் ஜக்காத்தைப் பெறுவதற்கும் உரிமையுள்ளவர் என்பதை நினைவூட்டுகிறோம்

- **ஆசிரியர்**

# ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம் யாருடையது..?

இன்று உலகம் முழுவதும் இஸ்லாத்தின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு பயங்கரவாதத்தை போதிக்கிறது என்பது ஆகும். உதாரணமாக ளைளை தீவிரவாத அமைப்பை உருவாக்கியது இஸ்லாம்தான் என்று குற்றம்சாட்டுகள் வைக்க படுகிறது......

**முதலில்** ISIS **அமைப்பு இஸ்லாமிய அமைப்பா..???**

ஈராக்கிலும் சிரியாவிலும் மனித நாகரிகம் கண்டிராத காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளை இஸ்லாத்தின் பெயரால் நிகழ்த்திவரும் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம் உண்மையில் யாருடையது..?

அதன் நிறுவனரும் தலைவரும் நான்தான் என்று வீடியோக்களில் காட்சியளித்து, தூய அரபிமொழியில் மிரட்டல் விடுத்துக்கொண்டிருக்கும் அபூபக்ர் அல்பஃக்தாதீ என்பார் யார்.....?

இஸ்லாம் கூறும் அமைதி மார்க்கத்திற்கு நேர் எதிரான நடவடிக்கைகளை இஸ்லாத்தின் பெயரால் அரங்கேற்றிவரும் இந்த காட்டுமிராண்டிகள் யார் என்ற குழப்பம் உலக முஸ்லிம்கள் அனைவரையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இவர்களின் பின்னணி என்ன என்பதெல்லாம் தெரியாமல் உலக முஸ்லிம்களைப் போன்றே நாமும் குழப்பத்தில்தான் இருந்தோம். இந்நிலையில், குவைத்திலிருந்து வெளிவரும் 'அல்முஜ்தமா' எனும் இஸ்லாமிய அரபு மாத இதழில் அக்டோபர் (2014) பிரதியில் ஓர் ஆய்வுக் கட்டுரை. கட்டுரையை ஃபிரான்ஸ் கலாசாரத் துறை பேராசிரியர் டாக்டர் ஸைனப் அப்துல் அஸீஸ் எழுதியிருக்கிறார்.

'இராக் கிறித்தவர்களும் இனப்படுகொலை பற்றிய ஊகங்களும்'. கட்டுரையின் இறுதியில் டாக்டர் ஸைனப் எழுதியிருப்பதன் தமிழாக்கம் அப்படியே கீழே தரப்பட்டுள்ளது.. நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்:

ஐ.எஸ். இயக்கத்தை அரபி இதழ்கள் சுருக்கமாக 'தாஇஷ்' எனக் குறிப்பிடுகின்றன. இதன் பொருள் 'அத்தவ்லத்துல் இஸ்லாமிய்யா ' (இஸ்லாமிய அரசு) என்பதாகும். 'கிலாஃபத்' ஆட்சி என விளக்கம் கூறலாம். இந்த இயக்கத்தின் தலைவர் 'அபூபக்ர் அல்பஃக்தாதி'யை 'பஃக்தாது கலீஃபா' என அவருடைய. ஆதரவாளர்கள் அழைக்கின்றனர்.

இவரது பின்புலம் குறித்து முன்னணி இணைய தளங்கள், குறிப்பாக ***'Veteran Today'*** எனும் இணையதளம் தோலுரித்துக்காட்டியிருக்கிறது

- பக்தாத் கலீஃபா, இஸ்ரேல் உளவு அமைப்பான 'மொசாத்'தின் கையாள்.
- இவர் யூதப் பெற்றோருக்குப் பிறந்தவர்.

● அபூபக்ர் அல்பஃக்தாதியின் உண்மையான பெயர்: ஷைமோன் எலியூட். இவரை இஸ்ரேலின் பயங்கரவாத அமைப்பான மொசாத், தன் உளவுப் பணிகளுக்காக உருவாக்கிப் பயிற்சியையும் அளித்துள்ளது. உளவுத் துறையிலும் வெளியுறவுத் துறையிலும் அவர் பயிற்சியை முடித்துள்ளார். அத்துடன், பல்வேறு இராணுவப்பயிற்சிகளுக்கும் உட்படுத்தப்பட்டார். பல்வேறு சோதனைகளையும் அவர்.கடந்துவந்துள்ளார்.

**இதுவெல்லாம் எதற்காக?**

அரபு மற்றும் முஸ்லிம்களின் வாழ்வையும் இஸ்லாமிய சிந்தனைகளையும் அழிக்கும் சதிவேலைகளுக்கு எலியூட் தலைமை ஏற்க வேண்டும். அழிவு சக்திகளை ஒருங்கிணைத்து வழிநடத்த வேண்டும் என்பதற்காகத்தான்!

இதில் பெரிய வேடிக்கை என்ன தெரியுமா?

● ஐ.எஸ். ***(Islamic State)*** அமைப்பு, பயங்கரவாத இயக்கங்களின் ஐ.நா. பட்டியலில் இடம்பெற்றுள்ள அதே வேளையில், அதற்குப் பொருளுதவி செய்வது அமெரிக்காவாகும்.

● 2014 வரி ஆண்டுக்கான இரகசிய கூட்டத்தில் முடிவான சட்டத்திற்கேற்ப ஐ.எஸ். அமைப்புக்குப் பொருளுதவி செய்ய அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல் அளித்துள்ளது. இது, 2014 செப்டம்பர் 30 வரைக்குமான ஒப்புதலாகும்.

● இன்னொரு சுவாரசியம் என்னவென்றால், 2004 முதல் 2009 வரை 5 ஆண்டு காலம் குவாண்டநாமோ சிறையில் அபூபக்ர் அல்பஃப்தாதி இருந்துள்ளார். இந்தக் காலகட்டத்தில் சி.ஐ.ஏ. மற்றும் மொசாத் ஆகிய உளவுத் துறை அமைப்புகள் தம் பணிகளுக்காக ஆள் திரட்டியபோது அபூபக்ரைப் பயன்படுத்த எண்ணின. பல்வேறு நாடுகளில் இருக்கும் முஜாஹித்களை ஒரே இடத்தில் திரட்டுவதற்கு வசதியாக ஒரு குழுவை அமைக்கும் பெரிய பொறுப்பினை அபூபக்ரிடம் அவை கொடுத்தன. இக்குழு, முஜாஹித்கள் யாரும் இஸ்ரேலைத் தாக்கிவிடாமல் தடுக்கும் பணியைச் செய்ய வேண்டும் என்பது மொசாத்தின் திட்டமாகும்.

● அபூபக்ர் என்ற ஒற்றரை மொசாத் தேர்ந்தெடுத்ததன் நோக்கம், இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக விளங்குகின்ற நாடுகளின் இராணுவ மற்றும் சிவில் வட்டாரங்களில் ஊடுருவுவதே ஆகும். அகண்ட இஸ்ரேலை உருவாக்குவதற்கு வசதியாகவும் அந்நாடுகளின் ஒவ்வொரு பகுதிமீதும் ஆதிக்கம் செலுத்துவதற்கு வசதியாகவும் சியோனிஸ ஆட்சியை உருவாக்கும் பணியை எளிதாக்க வேண்டும். உலகின் நாலா பாகங்களிலிருந்தும் தீவிரவாதிகளின் ஒரு பெரும்படையை ஓரிடத்தில் ஒன்றுசேர்த்து, ஷைத்தானின் உண்மையான படை இதுதான் என உலகத்திற்கு அடையாளம் காட்ட வேண்டும்.

● அவர்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்' எனும் கலிமா பொறிக்கப்பட்ட கறுப்புக் கொடியைத் தூக்கிக் காட்டுவார்கள். இதன்மூலம், இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பை உலக மக்களிடம் விதைக்க முடியும் என்பது மொசாத்தின் கனவாகும்.

● இப்படையினர், ஈவிரக்கமின்றி கைதிகளைத் துப்பாக்கியால் சுட்டும் கழுத்தை அறுத்தும் கொலை செய்வார்கள். இந்தப்பயங்கரமான காட்சிகளைப் படமாக்கி இணையதளம் உள்ளிட்ட ஊடகங்களில் வெளியிடுவார்கள். இவர்கள் இரத்த வெறிபிடித்த காட்டுமிராண்டிகள் என உலகம் அடையாளம் காண வேண்டும்.

● யாராலும் சகிக்க முடியாத, மனிதாபிமானமே இல்லாத இந்த நிலைக்கு ஒரு மனிதன் வரவேண்டுமென்றால், ஒன்று அவன் போதைக்கு அடிமையாக இருக்க வேண்டும் அல்லது இரத்தத்தையும் பயங்கரத்தையும் பார்த்துப் பார்த்துப் பழகிப்போனவனாக இருக்க வேண்டும்.

● இதுதான் அமெரிக்க சியோனிஸ போர் உத்தியாகக் காலம்காலமாக இருந்து வருகிறது.

சுருங்கக்கூறின், ஐ.எஸ். எனும் இந்தப் படைக்கும் இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும் அறவே இல்லை. இது, முஸ்லிம்களின் கரத்தாலேயே இஸ்லாத்தின் மீது போர் தொடுப்பதற்காக அமெரிக்கா நிகழ்த்தும் நாடகமாகும்.

இஸ்லாமிய வெறுப்பை உலக மக்களில் விதைத்து உலகெங்கும் வேகமாகப் பரவிவரும் இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுத்துவிடலாம் என்ற எண்ணமே இதற்குக் காரணம் என்பது தெரிகிறது. ஆனால் இறைவனின் மார்க்கம் அனைத்து சதிகளையும் வென்றே வந்துள்ளது என்பது வரலாறு நமக்கு தரும் பாடமாகும். இவ்வுலகின் உரிமையாளனோ இம்மார்க்கம் அகில உலக மக்களுக்கும் அருட்கொடையாக இறக்கப்பட்ட ஒன்று இதை யாரும் தடுக்க முடியாது என்கிறான் தனது திருமறையில்:

*'தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள் – ஆனால் இறைமறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவனின் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்.' (அல்–குர்ஆன் 9:32)*

ஆனால் இதன் வளர்ச்சி கண்டு யாரும் கவலை கொள்ள வேண்டியதில்லை. இது ஒரு இனத்தையோ நாட்டையோ ஒழிக்கவோ அல்லது உயர்த்தவோ வந்ததல்ல. மாறாக தர்மத்தை நிலைநாட்டி பூமியில் அமைதியைப் பரப்ப வந்த ஒன்று எனபதை உணர்ந்துவிட்டால் எதிர்ப்புகள் மறையும். இன்றைய எதிரிகள் நாளை இம்மார்க்கத்தின் காவலர்களாக மாறுவார்கள்.



# வாரிசுகளாலேயே கொல்லப்படும் வயதான பெற்றோர்!

## ~ அதிர்ச்சித் தகவல்

இறையச்சம் ஊட்டப்படாமல் பிள்ளைகளை வளர்த்தால் என்ன நடக்கும்? இதைப் படித்தாவது இறைவனைப் பற்றியும் மறுமை வாழ்வு பற்றியும் உரியமுறையில் மக்களுக்கு கற்றுக் கொடுத்து நல்லொழுக்கமுள்ள தலைமுறைகளை உருவாக்க முற்படுவோமா?

கால்நூற்றாண்டுக்கு முன்னர் பெண் சிசுக்கொலைகள் நடந்து ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்கிய தமிழ்நாட்டில் இன்று பெற்றோர் கொலைகள் நடக்கத் துவங்கியிருக்கின்றன.

தமிழ்நாட்டின் முதியோர் பராமரிப்பின் மோசமான நிலைமையே இத்தகைய மவுனக்கொலைகள். இந்த நிலைமை உருவானதற்கான சமூக, பொருளாதார, கலாச்சார காரணிகள் பல இருந்தாலும் முக்கிய காரணி ஒழுக்கம் போதிக்கப் படாமையே!

**'100 கிராமங்களில் மட்டும் 200 பேர் கொலை?'**

மதுரையை ஒட்டிய உசிலம்பட்டி பகுதியில் செயற்படும் தொண்டு நிறுவனமான யுரைஸ் என்கிற நிறுவனம் எடுத்த கணக்கெடுப்பின்படி சுமார் நூறு கிராமங்களில் மட்டும் 150 முதல் 200 முதியோர் கொலைகள் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த நிலைமை வெறும் மதுரைப் பிராந்தியத்தில் மட்டும் நடக்கவில்லை. தமிழ்நாட்டின் வேறு இடங்களிலும் இத்தகைய பெற்றோர் கொலைகள் நடந்திருக்கின்றன. இன்றும் நடப்பதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சம்பவங்களில் பெரும்பாலும் பெற்றோர்கள் அவர்களின் சொந்த பிள்ளைகளாலேயே கொல்லப்படுகிறார்கள்.

இத்தகைய முதியோர் கொலைகள் நடப்பது சம்பந்தப்பட்ட ஊரில் அல்லது பகுதியில் எல்லோருக்கும் தெரிந்தே இருக்கிறது. ஆனால் யாரும் அதுகுறித்து பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் அது சட்டப்படி தண்டிக்கப்படுவதும் இல்லை. போதுமான சட்டரீதியிலான சாட்சியங்கள் இல்லை என்று கூறி எல்லோரும் இந்த பிரச்சனையை ஒன்று புறந்தள்ளப் பார்க்கிறார்கள் அல்லது வேகவேகமாக கடந்து செல்ல முயல்கிறார்கள்.

**தற்கொலைத் தூண்டுதல் தவறினால் முதியோர் இல்லம்**

மேலும் எல்லா வீட்டிலும் வேண்டப்படாத எல்லா முதியவர்களும் கொல்லப்படுவதும் இல்லை. பலர் தற்கொலையை நோக்கி படிப்படியாக

தள்ளப்படுகிறார்கள். இன்னும் சிலர் பெற்றோரை முதியோர் இல்லத்தில் பலவந்தமாக கொண்டுபோய் சேர்த்துவிடுகிறார்கள். சில சமயம் அந்த முதியவர்களுக்குத் தெரியாமலே கூட. இன்னும் பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் புறக்கணிப்பு மற்றும் வன்முறைகளை பொறுக்க முடியாமல் முதியவர்களில் பலர் தாமாகவே முதியோர் இல்லம் தேடி ஓடும் சூழலும் நிலவுகிறது. **தகவல் உதவி: பிபிசி 12-12-2014**

வயதான காலத்தில் தம்மைப் பெற்ற பெற்றோர்களை இவ்வாறு கொல்லும் கல் நெஞ்சக்காரர்கள் தனது மகனாலோ அல்லது தனது மகளாலோ பிற் காலத்தில் இதே முறையால் கொல்லப்படலாம் என்பதை நினைத்துதான் பார்த்தார்களா?

பெற்றுவளர்த்தவர்களுக்கு நன்றிக்கடனாக அவர்களை மரணம் வரைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றவேண்டும் என்பது நம்மைப் படைத்த இறைவனின் கட்டளை என்பதும் அந்த கடமையை சரிவர நிறைவேற்றாவிட்டால் மறுமையில் அவனிடம் நரக தண்டனை உள்ளது என்பதை உணர்ந்தால் இக்கொடுமையைச் செய்ய முன்வருவார்களா இவர்கள்? இறைவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு இன்று வாழும் தலைமுறைகளுக்கு இல்லாமல் போவதற்கு ஒரு முக்கிய காரணம் இதுவே:

அவர்களிடம் இறைவனைப்பற்றிய எச்சரிக்கை உணர்வு ***(seriousness)*** இல்லாமல் ஆகிவருவதே!

அதற்குக்காரணம் என்ன?

உயிரற்ற உணர்வற்ற பொருட்களையெல்லாம் காட்டி இவையே உங்கள் கடவுள்கள் என்று போதிக்கப்படுவதும் நாத்திகம் போதிக்கப்படுவதும்.

இப்போது கீழ்கண்ட திருக்குர்ஆன் வசனத்தைப் படித்துப் பாருங்கள்:

அவனையன்றி வேறு எவரையும் நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான் அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை உ.்.ப் (சீ) என்று சடைந்தும் சொல்ல வேண்டாம் – அவ்விருவரையும் உம்மிடத்திலிருந்து விரட்ட வேண்டாம் – இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக! இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக் மேலும், 'என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னைப்பரிவோடு அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!' என்று கூறிப் பிரார்த்திப்பீராக! (திருக்குர்ஆன் *17:23–24*) நன்றி: சுவனப் பிரியன்

# மறுமைக்காக உழைக்க விரும்புவோருக்காக...

● **மனிதர்களோடு வளரும் ஆசைகள்:**

“மனிதன் (வளர்ந்து) பெரியவனாக ஆக அவனுடன் இரண்டு ஆசைகளும் வளர்கின்றன: 1. பொருளாசை. 2. நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற ஆசை” என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி), ஆதாரம் : புகாரி

● **செல்வத்துக்கு அடிமையானவன் துர்பாக்கியவான்:**

“பொற்காசு, வெள்ளிக்காசு, குஞ்சம் உள்ள (ஆடம்பர) ஆடை, சதுரக் கம்பளி ஆடை ஆகியவற்றுக்கு அடிமையாகிவிட்டவன் துர்பாக்கியவான் ஆவான். அவனுக்கு (செல்வம்) வழங்கப்பட்டால் திருப்தியடைவான். (செல்வம்) வழங்கப்படாவிட்டால் அதிருப்தியடைவான்” என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி

● **இன்னும் வேண்டும் என்ற ஆசை:**

“ஆதமின் மகனுக்கு (மனிதனுக்கு) இரண்டு நீரோடைகள் (நிறைய) செல்வம் இருந்தாலும் மூன்றாவதையும் அவன் தேடுவான். ஆதமின் மகனுடைய வயிற்றை மண்ணை (மரணத்தை)த் தவிர வேறெதுவும் நிரப்பாது. (பாவங்களிலிருந்து) பாவமன்னிப்புக் கோரி மீண்டுவிட்டவரின் கோரிக்கையை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான்” என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : புகாரி

# வாசகர் எண்ணம்

● டிசம்பர் மாத இதழ் மூலம் நான் ஏசுவைப் பற்றி தெரியாத பல விஷயத்தையும் தெரிந்து கொண்டேன். மட்டுமல்லாமல் இறைவனின் ஏகத்துவத்தை ஆதாரத்தோடு கூறும் இதழாகவும் அது அமைந்துள்ளது.

**- நவ்ஃபல் ஹபீப், காஞ்சிபுரம் (sms மூலம்)**

● ஜனவரி இதழ் மிகச் சிறப்பாக உள்ளது. கிருஸ்துவர்கள் கூட அறிந்திராத பல விடயங்களை கொண்டுள்ளது இதழ்.உண்மையிலேயே சமூக நல்லிணக்கத்தை உருவாக்கக் கூடியதாக அமைந்துள்ளது. நபிகளார் தங்களின் மகளைப் பாராட்ட இயேசுவின் தாயாரை ஒப்பிட்டுக் கூறியது கண்டு மகிழ்ந்தேன். எல்லா கட்டுரைகளும் அருமையாக உள்ளன. இதழை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்து கிறஸ்தவ அன்பர்களிடையே விநியோகம் செய்யலாமே. பல தவறான கண்ணோட்டங்களும் மாற வாய்ப்புண்டு.

**- ஏ சி பிரபாகரன், அல்சூர், பெங்களூர் (sms மூலம்)**

# நபிகளாரின் நற்பண்புகள்

## ● பொதுமக்களின் அடிமையாக ஓர் ஆட்சித்தலைவர்

நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் தடித்த கரை கொண்ட நஜ்ரான் நாட்டு சால்வை ஒன்றைப் போர்த்தியிருந்தார்கள். அப்போது கிராமவாசி ஒருவர் அவர்களை நெருங்கி அந்தச் சால்வையால் (அவர்களை) வேகமாக இழுத்தார். அந்தக் கிராமவாசி வேகமாக இழுத்ததால் சால்வையின் ஓரப்பகுதி நபி (ஸல்) அவர்களின் தோள்பட்டையில் அடையாளம் பதித்துவிட்டிருந்ததை கண்டேன். பிறகு அவர், 'முஹம்மதே! உங்களிடமுள்ள அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து எனக்குக் கொடுக்கும்படி கட்டளையிடுங்கள்' என்றார். உடனே நபி (ஸல்) அவர்கள் அவரைத் திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டுப் பிறகு அவருக்குக் கொடுக்கும்படி ஆணையிட்டார்கள். என்று அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவித்தார். ஆதாரம் : புகாரி.

## ● மன்னிக்கும் பெருந்தன்மை

இரண்டு விஷயங்களில் விரும்பியதைத் தேர்வு செய்து கொள்ளும்படி இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கூறப்பெற்றால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே அது பாவமான விஷயமாக இல்லாதிருக்கும் பட்சத்தில் எப்போதும் தேர்வு செய்வார்கள். அது பாவமான விஷயமாக இருந்தால் அதிலிருந்து (விலகி) வெகு தொலைவில் நிற்பார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தமக்காக எதிலும் (யாரையும்) ஒரு பேதும் பழிவாங்கியதில்லை இறைவனின் புனித(ச் சட்ட)ம் ஏதும் சீர்குலைக்கப்பட்டு, அதற்கு பதிலாக இறைவனின் சார்பாகத் தண்டிக்க வேண்டுமென்று இருந்தாலே தவிர (அப்போது மட்டும் பழிவாங்குவார்கள்.) அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி), ஆதாரம் : புகாரி.

## ● நளினம் மிக்க ஓர் ஆன்மீகத் தலைவர்

அபூஹுரைரா (ரலி) அறிவித்தார்கள் : "ஒரு கிராமவாசி மஸ்ஜிது(ந் நபவீ பள்ளி வாசலு)க்குள் சிறுநீர் கழித்துவிட்டார். அவரைத் தாக்குவதற்காக அவரை நோக்கி மக்கள் குதித்தெழுந்தனர். அப்போது மக்களிடம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'அவரை விட்டுவிடுங்கள் அவர் கழித்த சிறுநீர் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றி விடுங்கள். (எப்போதும்) நளினமாக நடந்து கொள்ளவே நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள். கடினமாக நடந்து கொள்ள நீங்கள் அனுப்பப்படவில்லை" என்று கூறினார்கள். ஆதாரம் : புகாரி.

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-


Published from:

**House of Peace,**
PO Box no. 1726,
No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்

கோலார் தங்கவயல்: சகோ.பஷீர் அஹ்மத் 9845217262
ஓசூர் : சகோ. ர.ஃபீக் - 9994713191
தர்மபுரி: சகோ, அய்யூப் 9842627171
கோவை : சகோ. ஜுல்.ஃபிகர்-8015714648
மதுரை: சகோ. ஆதில்- 9043967747
திருப்பூர் : சகோ. ஷேக் தாவுத் - 9150068919
திருச்சி : சகோ. திருச்சி முஸ்த.ஃபா -9865446344
குன்னூர்: சகோ. அப்துல் ரகுமான் - 9843622246
சென்னை: அப்துல் அக்பர் .ஃபிர்தௌசி- 9944656942
அப்துல்லாஹ் .ஃபிர்தௌசி- 9894442844
சேலம் : சகோ. இப்ராஹீம் - 9994091364
தஞ்சாவூர்,கும்பகோணம்: சகோ. அப்துல்சலாம் - 9597285160
விழுப்புரம்: சகோ. அப்துல் கனி - 9790290002
திருநெல்வேலி: சகோ. ரி.ஃபாயி - 9840911985
ஈரோடு: சகோ. ஷேக் தாவுத் - 7373947869
மயிலாடுதுறை: சகோ. அமீர் ஹம்சா - 9942941190


Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/281 73
Regd under Postal Regn. No.KRNA/BGE/1057/2015- 2017
posted at MBC Bangalore GPO b/w 25th to 27th of
every month.      No of pages: 24+4
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

**சுமார் ஐயாயிரம் வருடங்கள் முன் இங்கே ஒரு கூட்டம் வாழ்ந்தது. அவர்கள் நினைத்தார்கள் வாழ்வு நிலைக்குமென்று.... பாறைகளைக் குடைந்து அழகிய வீடுகளை அமைத்துக் கொண்டார்கள்... வீடுகள் நிலைத்து நிற்கின்றன இன்று! .... ஆனால் அதில் வாழத்தான் அவர்கள் இல்லை இன்று! மறுமைக்காகவே இம்மை என்பதை மறுத்தார்கள் அன்று !**

